செய்தி வெளியீட்டு எண் : 845

# தமிழக அரசு செய்தி வெளியீடு – 9–10–2008

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்து அரசியல் இயக்கங்களும், அமைப்புகளும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வலியுறுத்தியதின் காரணமாக மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை மேலும் தொடர்ந்து விரைவுபடுத்திடவும் – நிலையான அமைதி அங்கே உருவாகிடத் தக்க முயற்சிகளை மேற்கொள்ளவும் – அங்கே இனப்படுகொலையும், போரும் அல்லாத சூழ்நிலையை உருவாக்கவும் மத்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, தமிழக அரசின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று வரும் அக்டோபர் 14ஆம் தேதியன்று மாலை 4.30 மணிக்கு தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பியுள்ளார்.,

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை